[23rd March 1959

THR HON. SRI M. A. MANICKAVELU : இதற்கு ஒரு காரணம் சொல்லப்படுவது என்னவென்ருல், வருஷத்திற்கு ஒரு பிள்ளை என்ற வகையிலே பிள்ளை பிறந்து கொண்டிருந்தால், அது தாயாரைப் பாதிக்கிறது, பிள்ளையையும் பாதிக்கிறது. அதற்காகத் தான் "ஸ்பேஸிங்" என்ற முறையிலே, மூன்று வருஷங்களுக்கு ஒரு தடவை, ஐந்து வருஷங்களுக்கு ஒரு தடவை பிள்ளை பெறுகிறது என்ற நியதி இருந்தால், இந்தச் சம்பவம் ஏற்படாது.

SRI M. R. KANDASWAMI MUDALIYAR : பிரசவத்திற்குப் பின்னல் தாய் இறந்துபோகும் நிலை இருக்கிறது. அது ஆஸ்பத்திரிகளிலுள்ள டாக்டர்கள் சரியான முறையிலே கவனிக்காததால் ஏற்படுகின்றதா ? அல்லது அவர்களுடைய உடல் நிலைக் கோளாறினல் ஏற்படுகின்றதா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : இது அவர்களுடைய கோளாறினல்தான் ஏற்படுகிறதேயொழிய, டாக்டர்கள் கோளாறினல் ஒன்றும் இல்லை.

SRI V. K. KOTHANDARAMAN : போதுமான போஷாக்கான உணவு இல்லாத காரணத்தால் தான் இது போன்ற குழந்தைகள் பிறப்பதற்கு முன்னல் இறப்பதும், அங்கஹீனமாய்ப் பிறப்பதும், அதற்குப் பிறகு தாய் இறப்பதும் . . .

MR. SPEAKER : நீங்கள் உப கேள்வியாகக் கேட்பது மூலக் கேள்விக்கோ, அதற்கு அளிக்கப்பட்ட பதிலுக்கோ சம்பந்தம் உடையதாக இருக்கவேண்டும். உங்கள் உப கேள்வி அபிப்பிராயம் சொல்வதாக இருக்கிறது. கேள்வியின் போது அபிப்பிராயம் சொல்வதற்கு இடமில்லை. இந்தக் கேள்வி "அவுட் ஆப் ஆர்டர்".

Rural Dispensary at Kodukkur village

* 941 *Q.*—SRI K. R. VISWANATHAN : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) whether a rural dispensary was run at Kodukkur village, Udayarpalayam taluk, some years back by the District Board, Tiruchirappalli;

(*b*) if so, when; and

(*c*) the reasons for not continuing the same in that place?

THE HON. SRI M. A. MANICKAVELU : (*a*) Yes, Sir.

(*b*) Till May 1943.

(*c*) It was closed for want of a doctor.

SRI K. R. VISWANATHAN : இப்போதாவது அந்த ஆஸ்பத்திரியை மறுபடியும் திறந்து அங்கு டாக்டரை நியமிப்பதற்கு அரசாங்கம் வேண்டிய முயற்சி எடுத்துக்கொள்ளுமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : அங்கே ஒரு ஆஸ்பத்திரி திறக்கலாம் என்று அரசாங்கம் ஏற்கெனவே அதற்கு "சாங்ஷன்" செய்துவிட்டது. பொறுப்பு ஜில்லா போர்டினுடையது. அவர்கள் செய்யவில்லை. ஆகையால், ஜில்லா போர்டு தான் இதற்கு முயற்சி எடுத்துக்கொள்ளவேண்டும்.

Plantations

* 942 *Q.*—SRI V. K. KOTHANDARAMAN : கனம் உள் விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

இந்த ராஜ்யத்தில் ரப்பர், தேயிலை, காப்பி, யூகலிப்டஸ் (நீலகிரி தைலம்), தேக்கு ஆகியவைகள் எத்தனை ஏக்கர் பயிர் செய்யப்படுகிறது ? (ஜில்லாவாரியாக)

23rd March 1959]

THE HON. SRI M. BHAKTAVATSALAM : A statement[a] (No. I) showing the area under coffee, tea and rubber in the different districts of Madras State for the latest year for which the particulars are available is placed on the table of the House.

Bluegum (Eucalyptus) has been planted over an area of 3,086 acres in the Nilgiris and 449 acres, in the Upper Palnis. Planting of Educalptus hybrids is also done on an experimental scale at several localities in this State. About 100 acres of these plantations exist at present.

A statement[a] (No. II) showing the area of teak plantations in the Forest Divisions of the State is also placed on the table of the House.

SRI V. K. KOTHANDARAMAN : மேஜை மேலிலே வைக்கப்பட்டிருக்கும் ஸ்டேட்மெண்டிலே தேக்கு மரங்கள் ஆற்று ஓரங்களிலுங்கூட வைப்பதற்கு திட்டம் இருப்பதாகத் தெரிகிறது. அது போன்று பாலாற்றங் கரையோரங்களிலும் தேக்கு மரங்கள் வைப்பதற்கு ஏதாவது திட்டம் இருக்கிறதா ? இப்பொழுது திட்டம் இல்லாவிட்டாலும் இனிமேலாவது வைப்பதற்கு உத்தேசம் உண்டா?

THE HON. SRI M. A. MANICKAVELU : ஆற்றங்கரையில் தேக்கு வைப்பதென்றால் அதற்கு வேண்டிய ஈரம் இருக்க வேண்டும். காவிரி, தாம்பிரபரணி ஆற்றங்கரைகளில் ஈரம் இருப்பதுபோல் அவ்வளவு ஈரம் பாலாற்றங்கரையில் இருக்கிறதென்று சொல்வதற்கில்லை. அதுவும் சாத்தியப்படும் என்று ஏற்பட்டால் கவனிக்கப்படும்.

SRI K. PONNIAN : வால்பாரை பிரதேசத்தில் சர்க்காருடைய சிங்கோனு தோட்டத்தில் ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலம் காலியாக இருப்பதாலும் சிங்கோனுவுக்கு மார்க்கெட் இல்லாத காரணத்தாலும் அங்கே தேயிலை, காபி, ரப்பர் போன்ற பயிர்களை பயிரிட சர்க்கார் முன் வருமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அந்தப் பிராந்தியத்தில் சிற்சில இடங்களில் தேயிலை பயிரிடுவதற்கு இப்பொழுது ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது.

SRI T. T. DANIEL : May I know, Sir, from the Hon. Minister whether the Government have any programme at present to increase the extent of rubber cultivation in our State?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : As I said during the discussion on Forest Demand, there is a proposal of the Government that the Forest Department should take up the plantation of rubber in an area of about 3,000 acres in the Kanyakumari district.

SRI A. GOVINDASAMY : தேக்கு மரங்களை வளர வைப்பதற்கு அவசியமாக ஈரம் வேண்டும் என்று கனம் அமைச்சர் சொன்னார். ஈரமே இல்லாத பகுதியாகிய செங்கற்பட்டு ஜில்லாவில் ரயில்வே க்ராசிங்குக்குப் பக்கத்தில் இரண்டு மைல்களுக்கு பக்கத்தில் ஈரமே இல்லாத பகுதியில் அரசாங்கம்............

MR. SPEAKER : The hon. Member is not asking a question. He cannot make a speech. Let him please put the question. There need be no argument.

[a] Printed as Appendix II on pages 394-395 infra.

[23rd March 1959

SRI A. GOVINDASAMY : It is not an argument, Sir. It is a straight question.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : ஈரம் இல்லையென்றால் மழை இருக்க வேண்டும் அல்லது வேறு எந்த வகையிலாவது ஈரம் இருக்க வேண்டும். அப்படி இருந்தால்தான் தேக்கு பயிரிட முடியும். இதையே தான் காட்டிலாகா வ்வாதத்தின்போது குறிப்பிட்டேன். அதற்குமேல் விவரம் ஒன்றும் என்னிடம் இல்லை.

SRI P. G. MANICKAM : மேஜையின் மீது வைக்கப்பட்ட குறிப்பில் தெரிவிக்கப்பட்டபடி ரப்பர் தோட்டங்களில் எத்தனை ஏக்கர்கள் எவ்வளவு ஏக்கர் நிலங்கள் இந்தியர்களுக்குச் சொந்தமானவை, எவ்வளவு ஏக்கர் நிலங்கள் அந்நியருக்குச் சொந்தமானவைகள் என்ற குறிப்பு இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அப்படிப்பட்ட விவரம் ஒன்றும் என்னிடம் இப்பொழுது இல்லை.

SRI R. SRINIVASA IYER : Sir, may we know how far the plantation of teak in the Tanjore district has been successful?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : We are trying. There have been some old trees in some of the river banks, as for instance, in the compound of the travellers' bungalow in Nannilam. Now we are trying experimental plantation of teak on river sides, and so far it is successful.

Employment of poor agriculturists

* 943 Q.—SRI V. ARUNACHALA THEVAR : Will the Hon. the Minister for Revenue be pleased to state whether the Government have any schemes to provide employment to the poor agriculturists in all the taluks of Pudukkottai division due to failure of monsoon there?

THE HON. SRI M. A. MANICKAVELU : The Collector of Tiruchirappalli has submitted certain proposals for providing employment to agricultural labourers in Pudukkottai division and these are under consideration.

SRI A. VEDARATHNAM : அதே போன்று மற்ற பகுதிகளிலும் ஏதாவது நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறதா ? பஞ்ச நிவாரண நடவடிக்கைகளை ஏதாவது அரசாங்கம் உடனடியாக எடுத்துக் கொள்ளுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI M. A. MANICKAVELU : எந்தப் பகுதிகளிலெல்லாம் பருவ நிலை சரியாக இல்லாமல் இருக்கிறதோ அங்கேயெல்லாம் விவசாயிகளுக்கு வேலை கொடுப்பதற்கு பல பல திட்டங்களை வகுக்க வேண்டும் என்று ஆலோசனையில் இருக்கிறது என்று சொன்னேன்.

SRI K. R. VISWANATHAN : பருவ நிலை பாதிக்கப்பட்ட உடையார்பாளையம் தாலுக்காவில் ஏழை விவசாயிகளுக்கு வேலை கொடுக்க ஏதாவது திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கிறதா ? அப்படி ஏதாவது திட்டங்களை கலெக்டர் தயாரித்து அரசாங்கத்திற்கு சிபார்சு செய்திருக்கிறாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

MR. SPEAKER : The question relates to Pudukottai. Is Udayarpalayam in the same district?

THE HON. SRI M. A. MANICKAVELU : May be the same district but not the same division.